**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மணிமேகலை சிவபெருமானை எப்பெயரால் குறிப்பிடுகிறது?
2. தேவாரத் திருமுறைகளைத் தொகுத்தளித்த அருளாளர் பெயர் யாது?
3. இரட்டையர்களின் இயற்பெயர்கள் யாவை?
4. கோயிற் புராண ஆசிரியர் பெயர் என்ன?
5. ஆழ்வார்களுள் ஒரு பெண் ஆழ்வார் யார்?
6. முதல் மூவர் எனப் போற்றப்படும் ஆழ்வார்கள் யாவர்?
7. பெருமாள் திருமொழி அருளியவர் யார்?
8. வைணவத் திருத்தலங்கள் எத்தனை?
9. ஆக்க வேண்டியதும் போக்க வேண்டியதும் எதுவென யசோதர காவியம் குறிப்பிடுகிறது?
10. உரையாசிரியர் என்று பாராட்டப்படுபவர் யார்?
11. பௌத்த சமயத்தின் பெரும் பிரிவுகள் யாவை?
12. மக்கள் தேவர் இரு சாரார்க்கும் ஒத்த முடிவினை உடைய அறம் எது?
13. 'புத்தம் வீடு' யார் எழுதியது?
14. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எண்ணிக்கை யாது?

15. இஸ்லாமிய மூலக்கொள்கைகளான தொழுகை கலிமா ஆகியவற்றை எங்ஙனம் வழங்குவர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. காரைக்கால் அம்மையார் பாடிய நூல்கள் எவை?
2. காஞ்சிப் புராணம் கூறும் ஒழுக்க விதிகளில் இரண்டினைக் கூறுக.
3. பன்னிரு ஆழ்வார்களுள் நாயக நாயகி பாவம் வேண்டாது கண்ணன் மீது கொண்ட காதலைப் பாடிய ஒரே ஒரு பெண்பாவை யார்?
4. உலகத்தோற்றம் பற்றித் தொல்காப்பியர் கருதுவது யாது?
5. நீலகேசி தோன்றக் காரணம் யாது?
6. உவ வனத்தில் உள்ள பதும பீடத்தின் சிறப்பு யாது?
7. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணும் முதல் இலக்கியம் எது? அதனைப் பற்றிக் குறிப்பு வரைக.
8. முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் யாது? அதன் உள்ளடக்கம் யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள சிவன் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பழந்தமிழ் நூல்களில் திருமால் வழிபாடு குறித்துக் கட்டுரை தருக.

2. (அ) முதல் ஆழ்வார்கள் மூவர் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐம்பெருங்காப்பியங்களில் சமணக் குறிப்புகள் குறித்து எழுதுக.

3. (அ) கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் குறித்துக் கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடை வளர்ச்சியில் கிறித்தவர்களின் பங்களிப்பைத் தொகுத்துரைக்க.

❋ ❋ ❋